# 2018ம் ஆண்டு ஐப்பசி மாதம் சங்கம குடும்ப தின நற்செய்தி

*'பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு இடமளிப்பவர் உண்மையாகவே ஆசீர் பெற்றவர்'*

01.ஆரம்ப புகழ்ச்சி :

புபுது பாடல் இல. 02 "நமோ நமோ தூய ஆவியானவரே…"

02.புகழ்ச்சிகான உட்புகுதல் : எபேசியர் 5:18-20 உரோமையர் 8:26

**"திராட்சை மது அருந்தி குடிவெறிக்கு ஆளாகாதீர்கள் இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும். மாறாக தூய ஆவியால் ஆட்கொள்ளப் படுங்கள். உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம் பெறட்டும். உளமார இசை பாடி ஆண்டவரைப் போற்றுங்கள். நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்"**

பரிசுத்த ஆவியானவரினால் நிரம்பி செபிப்பதற்கு புபுது மக்கள் பெற்றிருக்கின்ற ஆசீர்வாதம் அதி உன்னதமாகும். பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்தவாறு செபிப்பவர் இறைவனுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்துபவர் ஆவார். இவர் இறைவனுடைய குரலுக்கு செவிமடுத்தவாறு தன்னை மறந்து ஆழமான விடுதலையுடன் இறைவனைப் புகழ்வார். பாடல், நன்றிபா, ஆவிக்குரிய பாடல் அவரது வாயினால் வெளிப்படும். புகழ்ச்சியின் பாடலை, இறைவனுக்கும் தமக்கும் கிடைத்த அனுபவங்களை முன்கொண்டு புகழ்ச்சி பாடலும் ஆவியானவரினுள் ஆவிக்குரிய பாடலும் பாடியவாறு புகழ்ச்சியில் ஈடுபடுவார். அந்நிய மொழியில், பாடல் புகழ்ச்சியின் வழியாக இறைவனைப் புகழ்வார். அந்நிய மொழியினால் புகழ்பவர் முழுமையாக ஆவியானவரினால் தன்னை வழிநடத்த இடமளிக்கும் ஒருவர் ஆவார். அவர் வெளிப்படுத்தும் வார்த்தைகள், மற்றும் முணு முணுப்பை குறித்து அவருக்கு எவ்வித தெளிவும், அதனை அறிந்து கொள்ளும் தன்மையும் காணப்படாது. ஆகையால் அவர் செய்யும் செபம் பரிசுத்த ஆவியானவரே அவரினுள் இருந்து செய்யும் செபமாகும். அந்நிய மொழியில் செபிப்பவர் தாம் அந்நிய மொழியில் வெளிப்படுத்தும் வார்த்தைகளை தாமாகவே விளக்கப்படுத்துவதை குறித்து கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் தாம் செய்யும் செபத்தை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்பதனாலேயே. அச் செபம் பரிசுத்த ஆவியானவராலேயே செய்யும் செபமாகும். புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் எம் ஒவ்வொருவருக்கும் பலவிதமான கொடைகள் உள்ளன. அந்நிய மொழியில் கதைக்கும் கொடையை ஒருவர் பெற்றிருப்பது பொல இன்னுமொருவர் அதை விளக்கப்படுத்தும் ஆற்றலை பெற்றிருக்கிறார். (1கொரிந்தியா 12:4-11) ஆகையால் மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்கள் என்ற வகையில் எந்நேரமும் எல்லா இடத்திலும் இறைவனைப் புகழ்வதற்கு நாம் பெற்றுள்ள விசேடமான வரத்திற்கு விழிப்புற்று பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்தவாறு இன்றைய புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

புபுது பாடல்.இல. 129 "பூரணமானவரே…."

03.மீளப்பார்த்தல். :

1. கடந்த மாதத்தினுள் எமது தேசத்திற்காக இறை ஆண்டவர் முன்னிலையில் உண்மையான நடுநிலை வகிப்பவராகி செபிப்பதற்கு பெற்ற அழைப்பிற்கு உங்களுடைய பிரதிசெயல் எவ்வாறாக அமைந்தது.
2. இன்றைய நாளில் பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்தவாறு புகழ்ச்சியில் ஈடுபட்ட நீங்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும்.

04.நாளுக்குரியநற்செய்தி ˙

'பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு இடமளிப்பவர் உண்மையாகவே ஆசீர் பெற்றவர்'

- இறைவனின் ஆசீர்வாதத்தை பெற வேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரினுள் வாழ்வது, இறை குரலுக்கு செவிமடுத்தல், இறை வார்த்தையினுள் வாழ்தல், இறை விருப்பத்திற்கு முழுமையாக அடிபணிதல் மிகவும் முக்கியமாகும்.
- புபுது மக்கள் என்ற வகையில் இந்த வருடத்தில் நாம் பெற்ற தலைப்பு அதற்கு சாட்சிபகிரும் ஒருவருக்கு பெரியதொரு உதவியாகும். "உமது வார்த்தையும் விருப்பமும் அக்கினியாகும் ஆசீர்வாதமாகும்."
- பரிசுத்த ஆவியானவருக்கு தன்னுள் செயல்பட, தன்னை வழிநடத்த, முழுமையாக இடமளித்த பேறுபெற்ற தாயாரை நினைவு கூறும் இம் மாதத்தில் நாம் அனைவரும் அவர் பெற்ற ஆசீர்வாதத்தை தியானித்தவாறு எமது வாழ்வினுள் பெற்றிருக்கின்ற அழைப்பிற்கு விழிப்புறுவோம்.
- பேறுபெற்ற தாயாரின் முழு வாழ்வும் பரிசுத்த ஆவியானவரினால் வழிநடத்தப் பெறும் வாழ்வாக, அவரை தியானிக்கும் எமக்கு விளங்கிக் கொள்ளலாம்.

i. அமலோற்பவ கன்னிகையாக இவ்வுலகில் பிறப்பது பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு அல்லவா? பேறுபெற்ற தாயார் அமலலோற்பவ கன்னிகை என விசுவசிக்க கூடிய உண்மைகள் என வெளிப்படுத்தியவாறு திருச்சபை தாயானவள் அதைஎமக்குகற்றுத் தருகின்றாள். ( ix வது பியுஸ் திருத் தந்தை, 1854/12/08….)

ii. புனித லூக்கா 1:26-38 பேறுபெற்ற தாயாருக்கு கபிரியேல் தேவ தூதன் மங்களம் கூறிய கணம் அகிலத்தின் மீட்புக்காக இறைவனின் திட்டத்தை பரிசுத்த ஆவியானவரினால் செயல்படுத்திய கணம் அல்லவா?
நினையாத நேரத்தில், நினையாத கணத்தில் அழைப்பு பேறுபெற்ற தாயாருடைய செவிகளுக்கு கேட்க செய்த கணத்தில் தோன்றிய உணர்வு, அனுபவம் விபரிக்க முடியாத நிலையாக இருந்தாலும் கேட்ட குரல், குரலின் வழியாக வந்த இறைவனுடைய வாத்தை, தனது ஆன்மாவினுள் பெற்றுக் கொள்வதற்கு அவரை வழிநடத்தியவர் பரிசுத்த ஆவியானவர் ஆவார்.
தமது வாழ்வின் அனைத்தையும் வெறுமையாக்கி இறைவிருப்பம் தன்னுள் நிறைவேறுவதற்கு இடமளிப்பதற்கு ஆவியானவருக்கு அடிபணிந்ததேவதாயா ˙'இதோ நான் ஆண்டவருடைய அடிமை உம் சொற்படியே ஆகட்டும்' என்று கூறியது முழுமையாக பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்தலின் பிரதிபலனினாலாயே.

iii. எலிசபெத் அம்மாளை சந்திக்க செல்வது (பு. லூக்கா 1:39-45)
சாதரணமான ஒரு மனிதனுக்கு தான் இருக்கின்ற நிலையில் இருந்து செய்ய முடியாத செயலாகிய மலைக்கு விரைந்து செல்லுதல், எலிசபேத் அம்மாளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுதல், அவர் இருக்கின்ற அனுபவத்திற்கு ஒற்றுமையாகுதல், ஆவியானவரின் செயல்பாட்டிற்கு இடமளித்தலின் பிரதிபலனினாலாயே என்று காணலாம். இந் நிகழ்வினுள் எலிசபெத் அம்மாள் தேவ தாயாருக்கு செலுத்திய வரவேற்பு, தேவதாயார் எலிசபேத் அம்மாளை ஏற்றுக் கொண்ட விதம் இவ் அனைத்து நிகழ்வினுள்ளும் பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாட்டினாலாகும். ‘‘மரியாவின் வாழ்த்தை எலிசபேத்து கேட்ட பொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபேத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில் பெண்களுக்குள் நீர் ஆசீர் பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே’’

iv. கானா ஊர் திருமணம் ( புனித யோவான் 2:1-5)
இந் நிகழ்வினுள் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டிற்கு இடமளித்த பேறுபெற்றதாயாரின் வாழ்வு மிகவும் தெளிவாக தெரிகின்றது. கணத்திற்கு கணம் வாழ்தல், மற்றவருடைய தேவையை புரிந்து கொள்ளுதல், கணத்திற்கு ஒற்றுமையாகுதல், தேடிப்பார்த்தல், விழிப்புறுதல் சங்கம வாழ்வு போன்ற உயர்ந்த பண்புகளை காணமுடியம். அது மாத்திரமல்ல இறைவன் மீது கொண்ட அசைவுராத விசுவாசம். எதிர்பார்ப்பு, வெளிப்படுவது திராட்சை ரசம் குறைந்த நேரத்தில் இயேசுவிடம் கூறிய சந்தர்ப்பத்தில் அவரது பதிலில் (அம்மா அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும். எனது நேரம் இன்னும் வரவில்லையே) கலங்காமல் பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்த தேவதாயார் அவர் சொல்வதை செய்யுங்கள் என்று கூறுவது முழுமையான விசுவாத்தினாலேயே. இன்னும் வராத நேரத்தை குறித்து தனது பங்கை செலுத்திய தேவதாயார் உண்மையாகவே பரிசுத்த ஆவியானவருக்கு முழுமையாக இடமளித்தலின் பிரதிபலினாலேயே.

v. சிலுவை அடிவாரம் (பு. யோவான் 19:28-30)
தனது மகன் சிலுவில் தொங்கி கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டு இறை தந்தை செய்யப் போகும் புதுமையை பார்த்துக் கொண்டு இருப்பதற்கு மனிதன் ஒருவரால் முடியாது. உயிர்ப்பை விசுவாசத்துடன் கண்ட தமது கண்களை இறைவன் பால் உயர்த்தி இருப்பதற்கு தேவதாயாருக்கு முடியுமாகியது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு முழுமையாக இடமளித்தினாலேயே. விசுவாசம். அன்பு, எதிர்பார்ப்பை தமது இதயத்தினுள் பதித்தவாறு தேவதாயார் துணை மீட்பாளாராகினார். அகிலத்தின் தாயார் ஆகினார். திருச்சபையின் தாய் ஆகினார். இவ்வாறான கௌரவத்தை பெறுவதற்கு அவரது வாழ்வு பரிசுத்த ஆவியானவரினால் நிரம்பிய, இறை வார்த்தை தமது வாழ்வின் வழியாக வெளிப்பட்ட, இறை விருப்பத்தை மாத்திரம் நிறைவெற்றிய ஆசீர்வாதமான வாழ்வாகியது. மேல் வீட்டரையில் சீடத்துவ சங்கத்துடன் ஆழமான எதிர்பார்ப்பில் இருந்ததும் பரிசுத்த ஆவியானவரினுள் வாழும் வாழ்க்கையை கட்டி எழுப்புவதற்கு தமக்கு கிடைத்த அழைப்பிற்கு விழிப்புற்றவாறாகும்.

- பெறுபெற்ற தாயார் முழு வாழ்வின் வழியாகவும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு அடிபணிந்து இறைவாத்தைக்கு முழுமையாக அர்ப்பணமாகி, இறை

விருப்பத்தை நிறைவேற்றும் தாகத்துடன் விழிபுற்று வாழ்ந்த வாழ்வு அரச, குருத்துவ, இறைவாக்கின அழைப்பிற்கு சாட்சி பகிர்ந்த வாழ்வாகியது.

- பேறுபெற்ற தாயாருடைய இதயம் ஒரு பாடசாலையாகும். கிறிஸ்துநாதரைப் பற்றிய மறை இரகசியங்களை அறிந்து கொள்வதற்கு, கற்றுகொள்வதற்கு, இருந்த பாடசாலை மரியன்னையின் இதயமாகும். தேவதாயாருடைய இதயத்தின் வழியாக இயேசுகிறிஸ்து நாதருடன் ஆழமான தொடர்பை கட்டிஎழுப்பி கொள்ளலாம்.

05.கலந்துரையாடுவதற்காக : ( 04 பேர்கொண்டகுழுவில்)

பேறுபெற்ற தாயாரை நினைவு கூறும் இம் மாதம் மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களாகிய உங்களுக்கும் எனக்கும் சாதரணமாக ஞாபகப்படுவதும், நினைவூட்டுவதும் மாத்திரமா? நோவினை, சுரூபங்களுக்கு மாலை அணிதல், பக்தி முயற்சிகள் செய்வதின் வழியாக திருப்தி அடைய முடியுமா?

புபுது எமது கெரிஸ்மாவின் முதலாவது அனுபவம், பேறுபெற்ற தாயாரை போல் ஆகுவதற்கு எம்மை அழைக்கின்றார். அவரினுள் இருந்த விசேடமான வாழ்வின் குணங்களை எமதாக்கிக்கொள்வதற்கு எம்முள் இருக்கின்ற விழிப்பணர்வு எத்தகையது?

- அமைதி
- வெறுமையாகுதல்
- கைவிடுதல்
- இடமளித்தல்
- உளம் திறவுதல்

அன்றாட வாழ்வில் அனுபவிக்கின்றோமா?

தனிப்பட்ட வாழ்வினுள், குடும்பத்தில். சங்கத்தில், நாட்டினுள், நாம் முகம் கொடுக்கின்ற நிகழ்வில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு எவ்வளவு தூரம் இடமளிக்கின்றோம்.

இறை வாத்தை, இறை சத்தம். கேட்டாலும் கேளாதவர்களைபோல் இருக்கின்ற எமக்கு தேவதாயாருடைய வாழ்வு சவாலாக இல்லையா? ஒவ்வொரு கணமும் விழிப்புற்று இருப்பதற்கு விசுவாச படிநிலைகளை எடுப்பதற்கு, எதிர்பார்ப்புடன் வாழ்வதற்கு எம்முள் இருக்கின்ற தாகம் எத்தகையது?

06.செயல்பாட்டிற்கு :

- புபுது மக்கள் என்ற வகையில் நிரந்தர விழிப்புறுதலுக்கு நாம் பெற்றிருக்கின்ற அனுபவம் மீண்டும் மீண்டும் புதிதாக்கிக் கொள்வோம். ஒரு நாளைக்கு 7 முறை விழிப்புறுவதற்கு, ஐவகை மொழிதல், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு இடமளிப்பதற்கு விழிப்புறுவோம்.
- ஆழமான இடமளிக்கும் வாழ்பவனூடாக வெளிப்படும் சாட்சியத்திற்கு நாம் உள்ளாகுவோம்.
- இறைவார்த்தையை வாசிப்பதற்கு, தியானிப்பதற்கு, நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம்.
- நாம் பெறும் அனுபவங்களை ஒருவர்ஒருவருடன் பகிர்ந்து கொள்வோம்.

07. இறுதிபகழ்ச்சி

புபுது பாடல் இல. 229 "என் ஆண்மா ஆண்டவரை…"

உங்கள் கவணத்திற்கு :

1. புபுது தேசிய குடும்ப தினம் ஐப்பசி மாதம் 14ம் திகதி மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை ஸ்ரீ பிரசங்சாராமையில் நடைபெறும்.
   - ஒவ்வொரு குடும்பமும் மேலதிக உணவு பார்சல் ஒன்றை எடுத்து வரவும். ஐதூர பிரதேச மக்களுக்காக)
   - திருப்பலியில் வாக்குறுதியை புதுப்பிக்கின்றபடியினால் உங்கள் திருமண மோதிரத்தை எடுத்து வரவும்.
2. ஐப்பசி மாதம் 20ம் திகதி சனிக்கிழமை மு.ப. 09.30 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை சிறுவர் ரெலி ஸ்ரீ பிரசங்சாராமையில் நடைபெறும்.
3. **ஐப்பசி மாதம் 27ம் திகதி சனிக்கிழமை மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை தமிழ் பேசும் மக்களுக்கான ஒன்று கூடல் ஸ்ரீ பிரசங்சாராமையில் நடைபெறும்.**